ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1889/43 - 2014 නොවැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2014.11.21

1889/43 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் ( திருத்தச் ) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: BD/EL/LND/3/AQUSN/07.
காணி அமைச்சின் இல.: 03/ඉේ/75/ඵල්/277/වීඊ.

பொது மக்கள் தேவையொன்றின் நிமித்தம் கீழே குறிப்பிடப்பட்ட காணியை எடுத்துக்கொள்ள அரசு உத்தேசிப்பதால் 1964ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் ( திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் (1) வது உப பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

ஊவ மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், எல்ல பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள கும்பள்வளை கோறளையில் சிறு பகுதி 71 B தொடங்கொல்ல கிராம அலுவலர் பிரிவின் ஸ்திரீபுரே கிராமம் (இ.கி.வ. 275) பிடஹகெதர (இ.கி.வ. 276) உடவாடிய (இ.கி.வ 277) கிராமத்தில் (இ.கி.வ. 272) அமைந்துள்ள பதுளை மாவட்ட நிலஅளவை அத்தியட்சகரின் இல. LRC/බ/64/බ/2 மற்றும்1974/4/19 ஆந் திகதியுடைய வரைபடத்திற்மைய துண்டு இல. 89,35,195 என குறிப்பிடப்படும் 53 ஏக்கர் அளவுள்ள களுகலவத்த எனும் பெயருடைய காணித் துண்டின் எலலைகள் .

**1. துண்டு இல.: 89**

காணியின் பெயர்: களுகலவத்த; உரிமை கோருபவர்: ஏ.கருப்பன் செட்டியார், களுகலவத்த, களுகல; விஸ்தீரணம்: 15 ஏக்கர், 07 பேர்ச்.

**2. துண்டு இல.: 35**

காணியின் பெயர்: களுகலவத்த; உரிமை கோருபவர்: ஏ.கருப்பன் செட்டியார், களுகலவத்த, களுகல; விஸ்தீரணம்: 7 ஏக்கர், 15 பேர்ச்.

**3. துண்டு இல.: 195**

காணியின் பெயர்: களுகலவத்த; உரிமை கோருபவர்: ஏ.கருப்பன் செட்டியார், களுகலவத்த, களுகல; விஸ்தீரணம்: 30 ஏக்கர், 3 றூட், 18 பேர்ச்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு எல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சமன்தி ரணசிங்ஹ,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அலுவலர்,
எல்ல.

பிரதேச செயலகம்,
எல்ல,
2014, நவெம்பர் 10.

12-226

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (460 வது அத்தியாயம்)**

7 ஆவது பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது தொடர்பு இலக்கம்:-3/2/2/63
காணி அமைச்சின் தொடர்பு இலக்கம்:-4/3/8/2011/பீசீ/183.

2014.08.25 ஆந் திகதிய 1877/12, ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி III ஆம் பகுதியில் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 1A பக்கத்தில் என்னால் பிரசுரிக்கப்பட்ட சிங்கள அறிவித்த லில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டுவஸ்நுவர பிரதேச செயலகத்தில் என்பதை "பண்டுவஸ்நுவர மேற்கு" பிரதேச செயலகத்தில் எனவும் நில அளவை வரைபட இலக்கம் 208 ல் காணி உபயோகம் பற்றிய தகவலில் லதக் என்பதற்கு பதிலாக "லிதக்" என திருத்தப்பட வேண்டும் எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

டப். ஏ. குலசூரிய,
பிரதேச செயலாளர்,
பண்டுவஸ்நுவர.

பிரதேச செயலகம்,
பண்டுவஸ்நுவர மேற்கு,
2014, ஒற்றோபர் 24.

12-227

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.:3/2/5/5/2027

மேல் குறிக்கப்பட்ட தலைப்பின்கீழ் 2002 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரகையில் பிரசுரிக் கப்பட்ட இல. 1221/2 என்ற அறிவித்தலில் குறிக்கப்பட்ட, மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத் தில், ஜா - எல பிரதேச செயலாளர் பிரிவில் ஜா - எல நகர சபை எல்லைக்குள் உள்ள வெளிகம்பிடிய கிராமத்தில், அமைந்துள்ள கம்பஹா நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட இல. கம்/ஜா/00/196 என்ற முதற் சுவட்டு வரைபடத்தில் காணித் துண்டு இல. டபிள்யூ என்ற பூவெல எனப்படும் பக்மீகஹகும்புர என்னும் காணியின் விஸ்தீரணம் ஹெக்டயார் 0.0220 எனக் குறிக்கப்பட்டதை ஹெக்டயார் 0.5428 என இத்தால் திருத்தம் செய்கின்றேன்.

மேலும், காணித்துண்டு "டபிள்யூ 1" என்ற பூவெல எனப்படும் பக்மீகஹகும்புர என்னும் காணியின் விஸ்தீரணம் ஹெக்டயார். 0.5428 எனக் குறிக்கப்பட்டதை ஹெக்டயார் 0.0220 என இத்தால் திருத்தம் செய்கின்றேன்.

டபிள்யூ. ஜீ. பிரேமலால்,
பிரதேச செயலாளர் (பதில்),
ஜா - எல.

பிரதேச செயலகம்,
ஜா - எல,
2014, நவெம்பர் 15.

12-228

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.